

பரமக்குடி சட்டமன்றத் தொகுதி சமூக வலைதளப்பயிற்சி பாசறை கூட்டம் 18.01.2025 அன்று பரமக்குடி தனியார் மண்டபத்தில் நடைபெற்றது. கழக இளைஞரணி செயலாளர், தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு பரமக்குடி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட 303 பாக இளைஞரணி பொறுப்பாளர்களுக்கும் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் சண்.சம்பத்குமார் ஏற்பாட்டில் ஸ்மார்ட் வாட்ச் வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் பால்வளம் மற்றும் கதர் கிராம தொழில் வாரிய துறை அமைச்சர் ஆர்.எஸ்.ராஜ கண்ணப்பன், மாவட்ட கழக செயலாளர் காதர் பாட்ஷா முத்துராமலிங்கம், எம்.எல்.ஏ., பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர் செ.முருகேசன், மாநில இளைஞரணி துணைச் செயலாளர்கள் எ.ன்.இன்பா ரகு, ஜி.பி.ராஜா, மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் சம்பத் ராஜா உட்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்



திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் தொகுதிக்குட்பட்ட வாகரையில் நடைபெற்ற பசுமை மாரத்தான் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகளை அமைச்சர் அர.சக்கரபாணி வழங்கினார்.


### இதுவரை 1 கோடியே 87 லட்சம் பேருக்கு வழங்கப்பட்டுள்ளது!

# ஜன.25 வரை பொங்கல் பரிசுத் தொகுப்பு வழங்கல் நீட்டிப்பு!

## அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் தகவல்!

சென்னை, ஜன.21-

முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டு துவக்கிவைக்கப்பட்ட பொங்கல் பரிசுத் தொகுப்பு வழங்கும் திட்டம் தமிழ்நாடு முழுவதும் 18.01.2025 வரை 85 சதவீதம் நிறைவு பெற்றுள்ளது என கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர். பெரியகருப்பன் தெரிவித்துள்ளார்.



இதுகுறித்து அவர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

தமிழர்களின் பழம்பெரும் பாரம்பரியத்தையும், பண்பாட்டையும் பிரதிபலிக்கும் விழாவாகப் பொங்கல் திருநாள் தமிழ்நாட்டில் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. இந்நாள் அறுவடைத் திருவிழாவாகவும், இயற்கைக்கும், உழவர் பெருங்குடி மக்களுக்கும் அவர்தம்மோடு சேர்ந்து உழைத்த கால்நடைகளுக்கும், நன்றியையும் மகிழ்ச்சியையும் தெரிவிக்கும் விழாவாகவும் ஒவ்வொரு ஆண்டும் கொண்டாடப்படுகிறது.

2025-ஆம் ஆண்டு தைப் பொங்கலைச் சிறப்பாகக் கொண்டாடும் வகையில் அனைத்து அரிசி குடும்ப அட்டைதாரர்கள் மற்றும் இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் குடும்பத்தினருக்கும் தலா ஒரு கிலோ பச்சரிசி, ஒரு கிலோ சர்க்கரை மற்றும் ஒரு முழுக்கரும்பு வழங்கப்படும்" எனவும், பொங்கல் திருநாளை முன்னிட்டு வழங்கப்படவுள்ள இலவச வேட்டி-சேலைகள் பொங்கல் பரிசுத் தொகுப்புடன் சேர்த்து வழங்கப்படும் எனவும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் என அறிவித்தார்கள்.

அதன்படி, கடந்த 9.1.2025 அன்று சென்னை, திருவல்லிக்கேணி நகர கூட்டுறவு சங்கத்தின் மூலம் சின்னமலை வேளச்சேரி பிரதான சாலையில் இயங்கி வரும் சைதாப்பேட்டை-11 நியாயவிலைக் கடையில் தமிழ்நாடு முதலமைச்சர் அரிசிபெறும் குடும்ப அட்டைதாரர்களுக்கு பொங்கல் பரிசுத் தொகுப்பு வழங்கி திட்டத்தினை துவக்கி வைத்தார்கள்.

இதன் மூலம், தமிழ்நாடு முழுவதும் 34,793 நியாய விலைக்கடைகளில் 2 கோடியே 20 லட்சத்து 94 ஆயிரத்து 585 அரிசி பெறும் குடும்ப அட்டைதாரர்கள், இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் குடும்பத்தினருக்கு பொங்கல் பரிசுத்தொகுப்பு வழங்கும் பணி முழுவீச்சில் நடைபெற்று வருகிறது. இதற்காக சுமார் 50,000 கூட்டுறவுத்துறை பணியாளர்கள் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

அதன்படி, 18.01.2025 வரை தமிழ்நாடு முழுவதும் 1 கோடியே 87 லட்சத்து 14 ஆயிரத்து 464 அரிசி பெறும் குடும்ப அட்டைதாரர்கள், இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் குடும்பத்தினருக்கு பொங்கல் பரிசுத்தொகுப்பு வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் 85 சதவீதம் பணிகள் நிறைவுபெற்றுள்ளன.

**ஜனவரி 25–ந்தேதி வரை பொங்கல் தொகுப்பு வழங்கப்படும்!**

மேலும், மீதமுள்ள பயனாளிகளுக்கு பொங்கல் பரிசுத்தொகுப்பு வழங்கும் பணி வருகின்ற 25.01.2025 அன்று வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. விடுபட்ட குடும்ப அட்டைதாரர்கள் பொங்கல் பரிசுத் தொகுப்பினைப் பெற்று பயன்பெறுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

இவ்வாறு கூட்டுறவுத் துறை அமைச்சர் கேஆர். பெரியகருப்பன் விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.



தேனி தெற்கு மாவட்டம் ஆண்டிபட்டியில் கழக மாநில இளைஞரணிச் செயலாளர், தமிழ்நாடு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு வெற்றுக்கால் சேவல் சண்டை போட்டியை தெற்கு மாவட்டச் செயலாளர் கம்பம்.ராமகிருஷ்ணன், எம்.எல்.ஏ., மகாராஜன் எம்.எல்.ஏ. ஆகியோர் தொடங்கி வைத்தார்கள்.

### தமிழ்நாடு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாளை முன்னிட்டு

# தேனி தெற்கு - ஆண்டிப்பட்டியில் வெற்றுக்கால் சேவல் சண்டை போட்டி!

## மாவட்டச் செயலாளர் கம்பம் ராமகிருஷ்ணன் எம்.எல்.ஏ. - மகாராஜன் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தனர்!

தேனி, ஜன.21 -

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு ஆண்டிபட்டி பகுதியில் நடைபெற்ற வெற்றுக்கால் சேவல் சண்டை போட்டியை தெற்கு மாவட்டச் செயலாளர் ராமகிருஷ்ணன் மற்றும் ஆண்டிபட்டி எம்.எல்.ஏ. மகாராஜன் ஆகியோர் தொடங்கி வைத்தார்கள்.

அழியும் தருவாயில் உள்ள சண்டை சேவல் இனத்தைப் பாதுகாப்பதை நோக்கமாகக் கொண்டு, தமிழகத்தில் ஆண்டுதோறும் பல்வேறு பகுதிகளில் சேவல் சண்டை போட்டி நடத்தப்பட்டு வருகிறது. அந்த வகையில் மாநில இளைஞரணி செயலாளருமான துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு தேனி மாவட்டம், ஆண்டிபட்டி அருகே கரட்டுப்பட்டி பகுதியில் ஆண்டிபட்டி மேற்கு ஒன்றிய விளையாட்டு மேம்பாட்டு அணி சார்பில் வெற்றுக்கால் சேவல் சண்டை போட்டி நடைபெற்றது. இந்த வெற்றுக்கால் சேவல் சண்டை போட்டிக்கு தேனி தெற்கு மாவட்டச் செயலாளரும், கம்பம் எம்.எல்.ஏ.வுமான ராமகிருஷ்ணன் மற்றும் ஆண்டிபட்டி சட்டமன்ற உறுப்பினர் மகாராஜன் ஆகியோர் தலைமை தாங்கி வெற்றுக்கால் சேவல் சண்டை போட்டியை தொடங்கி வைத்தார்கள்.

இந்த போட்டியில் தேனி, மதுரை, திண்டுக்கல், விருதுநகர், தஞ்சாவூர், நாகப்பட்டினம், கன்னியாகுமரி, சிதம்பரம் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் இருந்து போட்டியாளர்கள் கலந்து கொண்டனர். ஜவா, கதளி, கீரி, ஜர்கா, கிளிக்கொண்டை, வெள்ளைக்கொண்டை, முள்ளு சேவல் உள்ளிட்ட பல்வேறு வகையான சேவல்கள் போட்டியில் கலந்து கொண்டன. சேவல்களின் உயரம், வலு போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டு ஜோடி சேர்க்கப்பட்டு போட்டி போடப்பட்டது. சுமார் 300க்கும் மேற்பட்ட சேவல்களுடன் போட்டியாளர்கள் கலந்து கொண்டனர்.

இதற்காக ஒரே நேரத்தில் சுமார் 100மேற்பட்ட வெற்றுக்கால் சேவல் சண்டை போட்டிகள் நடக்கும் அளவிற்கு இடங்கள் தயார் செய்யப்பட்டிருந்தது. இந்தப் போட்டியில் பங்கேற்கும் சேவல்களுக்கு தீவிர பயிற்சி அளிக்கப்பட்டு, போட்டியில் பங்கேற்க கொண்டு வந்தனர்.

இதுபோல் பங்கேற்க வந்த சண்டை சேவல்களுக்கு கால்நடை மருத்துவர் பரிசோதனை செய்த பின்னரே, களம் காணும் வகையில், போட்டியில் பங்கேற்க அனுமதித்தனர். இந்த போட்டியில் சேவல்கள் கொண்டை சிலுப்பிக் கொண்டு ஆக்ரோஷமாக மோதிக் கொண்டன. இதில் கொத்துதல் மற்றும் பறந்து தாக்குதல் அடிப்படையில் சேவல்கள் தாக்குதல் அடிப்படையில் வெற்றி பெற்றதாக தேர்வு செய்யப்படுகிறது.

நீதிமன்ற அனுமதியுடன் நடைபெற்ற இந்த வெற்றுக்கால் சேவல் சண்டை போட்டியில் அசம்பாவித சம்பவங்கள் ஏற்படாமல் தடுக்கும் வகையில் ஏராளமான போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்தனர். இதில் கிழக்கு ஒன்றிய செயலாளர் ராஜாராம், பேரூர் செயலாளர் சரவணன், தெற்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் செஞ்சுரி செல்வம், தெற்கு விளையாட்டு மேம்பாட்டு அணி மாவட்ட துணை அமைப்பாளர் சேதுராஜா, கம்பம் நகர செயலாளர்கள் வீரபாண்டியன், பால்பாண்டி, விளையாட்டு மேம்பாட்டு அணி ஒன்றிய அமைப்பாளர் மலைச்சாமி, இளைஞர் அணியை சேர்ந்த எஸ் டி எஸ் சிவா. அர்ஜுனன் மற்றும் ஏராளமான நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

### ஒட்டன்சத்திரம் தொகுதி

# வாகரையில் பசுமை மாரத்தான் போட்டி!

## அமைச்சர் அர. சக்கரபாணி கொடியசைத்து துவக்கி வைத்தார்.

ஒட்டன்சத்திரம் ஜன. 21-

திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் தொகுதி, வாகரையில் தமிழர்திருநாள், தமிழ்நாடு முதலமைச்சர். மு. க. ஸ்டாலின், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு பசுமைமாரத்தான் போட்டியை உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி கொடியசைத்து துவக்கி வைத்துபோட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசு வழங்கிப் பேசினார்.

இந்நிகழ்வின்போது ஒன்றிய செயலாளர்கள், தங்கராஜ், பொன்ராஜ், ஒன்றிய துணைச் செயலாளர் ராஜ்குமார்,முன்னாள் மாவட்ட கவுன்சிலர் கிருஷ்ணசாமி, மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் ஆனந்தராஜ், ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் தண்டபாணி,முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் கலைச்செல்விஇராசுஉள்ளிட்ட இளைஞரணி,மாணவரணி நிர்வாகிகள், சார்பு அணியினர் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

### காரைக்குடி கம்பன் கழக வளாகத்தில்

# தமிழ்த்தாய் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை!

## மு.தென்னவன்- வி.பொன்துரை - அ.கதிர்வேல் - மாங்குடி எம்.எல்.ஏ. பங்கேற்பு!

காரைக்குடி, ஜன. 21-

காரைக்குடியில் கம்பன் கழக வளாகத்தில் அமைந்துள்ள தமிழ்த்தாய் கோவிலுக்குச் சென்று தமிழ்த்தாய் சிலைக்கு மாலை அணிவித்து மலர் தூவி வணங்கி வருவது ஆண்டு தோறும் தமிழ் ஆர்வலர்கள், தமிழ் மன்றங்களின் உறுப்பினர்கள் அனைவரும் தனது கடமையாக வணங்கி வருவதும் சிறப்பாகும்.



கம்பன் கழகத்திற்கு முத்தமிழ்அறிஞர் கலைஞர் அவர்கள் ஒரு முறை வந்த போது கம்பன் அடிப்படி சா.கணேசன் கலைஞர் அவர்களிடம் இந்த கம்பன் வளாகத்தில் தமிழ்த்தாய் கோயில் கட்டுவதற்கும் அதில் தமிழ் தாய்க்கு சிலை ஒன்று அமைத்து தருவதற்கும் தமிழர்கள் அனைவரும் வணங்கி தொழ வேண்டும் தமிழுக்கு மரியாதை செய்யும் பொருட்டு அதற்கான ஏற்பாட்டை தாங்கள் செய்ய வேண்டும் என்று வேண்டுகோள்விடுத்து தமிழ்தாய் கோயிலை இங்கே கட்ட அனுமதி அளித்தும் உதவி செய்தும் ஆவன செய்ய வேண்டுமாய் கேட்டுக் கொண்டார்கள். அதற்கு கலைஞர் அவர்கள் அந்த கோரிக்கையினை மகிழ்வோடு ஏற்றுக் கொள்கிறேன் என்று கலைஞர் சொன்னவுடன் அரங்கமே கைதட்டி பாராட்டி மகிழ்ந்தார்கள்.

அதன்படி கலைஞர் அவர்கள் 23.04.1975 ல் தமிழ்தாய் கோயிலுக்கு அடிக்கல் நாட்டியும் 16.04.1993 அத் தமிழ்தாய் கோயிலுக்கு வருகைதந்து கோயிலை திறந்து வைத்தும் தமிழ்நாட்டில் தமிழுக்கு தமிழர்களுக்கும் தமிழ் பேராளர்களும் மகிழும் வண்ணம் இந்நிகழ்ச்சி நடந்தது. இது காரைக்குடி மாநகரம் பெற்ற பெரும் பேறாகும்.

இவ்வாண்டு தமிழ் புத்தாண்டு நாளான தை முதல் நாளாக கொண்டாடும் காரை மாநகரில் உள்ள அனைத்து தமிழ் சங்கங்களும் தமிழ் ஆர்வலர்கள் அனைவரும் வருகை தந்து ன தமிழ் அன்னை சிலைக்கு மாலை அணிவித்தும் மலர்கள் தூவியும் மரியாதை செய்தார்கள். இந்நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சரும் இலக்கிய தென்றல் கலைஞர் தமிழ் சங்க நிறுவனருமான மு.தென்னவன், 50 ம் ஆண்டு பொன்விழா கண்ட அண்ணா தமிழ் கழக தலைவர் வி. பொன்துரை, செயலர் அ. கதிர்வேல், காரைக்குடி சட்ட மன்ற உறுப்பினர் மாங்குடி குறட்கழக தலைவர் என்.பி. ராமசாமி தமிழ்த் தாய் கலைக்கூட தலைவர் அறிவுடைநம்பி காரைக்குடி தொழில் வணிக தலைவர் திராவிட மணி மற்றும் அழகப்ப நடையாளர் கழக சங்கத்தார் மாநகராட்சி துணை மேயர் நா.குணசேகரன் மற்றும் தமிழர் சமய மறுமலர்ச்சி மாநாடு சித்தர்கள் பலரும் ரோட்டரி சங்கத்தார்களும் வருகை தந்து மிகச்சிறப்பாக நடைபெற்றது. மிகவும் மகிழ்ச்சிக்குரியது.

அதுபோல் கம்பன் கழகத்தின் சார்பில் இந்நிகழ்ச்சி சிறப்பாக நடத்த உதவியது மட்டுமல்லாது எங்களை மகிழ்வித்த தலைவருக்கும் எங்களின் நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறோம். தமிழ்த்தாய் கோயிலினை நல்ல முறையில் பராமரிக்கவும் புதுப்பிக்கவும் நிரம்ப வேலைகள் இருப்பதால் நம் முதல்வர் தளபதி தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் நம்மொழி கொடிகட்டி பறக்க வேண்டும்) என்பதை எங்கள் உள்ளத்தில் உள்ளதை தாங்கள் செய்து தரவேண்டும் என்று அன்பு கோரிக்கையினை தங்களுக்கு தெரிவிப்பதில் இதனை செய்து தரவேண்டும் என்று வேண்டி விரும்பி தங்களை பணிவுடன் கேட்டுக்கொள்கிறோம்.

இவ்வாறு கம்பன் கழகம் நிர்வாகிகள் கேட்டுக் கொள்கின்றனர்.



மண்டபம் பேரூர் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் நடந்த சமத்துவ பொங்கல் விழாவில் தூய்மை பணியாளர்களுக்கு வேட்டி, சேலை வழங்கப்பட்டது. மேலும் பேருந்து நிறுத்தத்தில் உள்ள கம்பத்தில் மண்டபம் பேரூர் கழகச் செயலாளர் அப்துல் ரஹ்மான் மரைக்காயர், கருப்பு சிவப்பு இரு வண்ணக் கொடி ஏற்றி வைத்து பொதுமக்களுக்கு பொங்கல் வழங்கினார். இதில் நகர் துணை செயலாளர் வானதி, நகர் பொருளாளர் சீனி மீராஸா, அவைத் தலைவர் முருகானந்தம், கவுன்சிலர்கள் சாதிக் பாட்ஷா, வாசிம் அக்ரம், முஹமது மீரா சாகிப், ஒன்றிய பிரதிநிதி குலாம் (எ) சாகுல் ஹமீது, மீனவர் சங்க நிர்வாகி ஆசாத், தகவல் தொழில்நுட்ப அணி நகர் அமைப்பாளர் வெள்ளைச்சாமி, நிர்வாகிகள் களஞ்சியராஜா, ராஜ்குமார், அயூப் கான் உள்பட பலர் கலந்து கொண்டனர்.